தேதி.10.02.2025

**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No**.31/2015 **திரு.கதிரேசன்** **வா.சா.1**

**வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் லாரி வாங்கி விற்பனை செய்தும், சொந்தமாக லாரி வைத்து வாடகைக்கு விடுகிறேன். **ஸ்ரீ** அனுமன் டிராஸ்போர்ட் பஸ் நிறுவனத்தில் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். பைனான்ஸ் பண்ணும் பழக்கம் உள்ளது என்றால் இல்லை. எனது பேரில் சொத்து ஏதேனும் விலைக்கு வாங்கியிருக்கிறேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் கிரையம் செய்து வைக்க கோரி பரிகாரம் கேட்டுள்ளேன் என்றும், மாற்றுப்பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக கிரையம் பெறும்போது தான் அசல் ஆவணங்கள் கொடுப்பது வழக்கம் என்றால் எப்படி என்று தெரியவில்லை. 2012ல் செய்த கிரைய உடன்படிக்கைக்கு முன்னர் பிரதிவாதிகளை எப்போது தெரியும் என்றால் ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்கு முன்பு. நெருங்கிய பழக்கம் எதுவும் இல்லை என்றால் தெரியும். பழக்கம் இல்லை. அக்ரிமெண்ட் செய்து கொண்ட சொத்தின் சர்வே எண் என்னவென்றால் தெரியாது. தாவா சொத்தின் செக்குபந்தி தெரியுமா என்றால் வடக்கு பக்கம் தார் ரோடு, தெற்கு பக்கம் இன்னொருவரின் வீடு, கிழக்கு மேற்கு திசை எனக்கு தெரியவில்லை. சொத்தை ஓட்டி ஒருபக்கம் பி.ஆர்.சி மெட்டல் கடை, மற்றொரு பக்கம் தம்பி கவுண்டரின் சொத்து. இந்த விவரங்கள் கொண்டு தான் தாவா கிரைய ஒப்பந்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான். சொத்தின் நீள அகலம் எவ்வளவு என்றால் நீள அகலம் தெரியவில்லை. மொத்தம் 5 1/2 செண்ட். நீள அகலம் எல்லாம் வா.சா.ஆ.1ல் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. நீள அகலம் எல்லாம் ஆவணம் எழுதும்போது யார் சொன்னார்

என்றால் நான் சொல்லவில்லை. டாக்மெண்ட் படி எழுதினார்கள். கிரைய உடன்படிக்கையின் சாட்சிகள் யார் என்று தெரியுமா என்றால் சிவக்குமார், கமலம். இந்த கிரைய உடன்படிக்கை சாட்சிகளை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். கிரைய உடன்படிக்கை செய்யும்போது என்ன பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் பவர் பத்திரம் செய்தோம். கிரைய உடன்படிக்கை செய்யும்போது பவர் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்ற விவரத்தை வழக்கிலும், பிராமண பத்திரிக்கையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. 2ம் பிரதிவாதி என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் பொது அதிகார பத்திரம் எனது அம்மா பெயரில் தாவா சொத்திற்குண்டான பவர் பத்திரம் என்றால் சரிதான். அந்த பொது அதிகார ஆவணம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா கிரைய உடன்படிக்கையில் உள்ள சாட்சிகளே தான் பி.வா.சா.ஆ.1ன் சாட்சிகள் என்றால் சரிதான். தாவா கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திய பத்திர எழுத்தர் தான் பி.வா.சா.ஆ.1ன் பத்திர எழுத்தர் என்றால் சரிதான். தாவா கிரைய உடன்படிக்கை 2,50,000/-த்திற்கு விலை பேசி 2,25,000/-ம் கொடுத்த மீதம் உள்ள ரூ.25,000/-த்திற்கு இரண்டு ஆண்டுகள் எதற்காக போடப்பட்டது என்றால் மொத்தம் 22,50,000த்திற்கு பேசி மொத்தம் 20,00,000/- கையில் கொடுத்துவிட்டேன். மறுபடியும் 2,25,000/-ம் கையில் கொடுத்தேன். மீதம் உள்ள 25,000த்திற்கு மகனின் திருமணத்திற்காக கொஞ்ச நாள் குடியிருந்து கொள்வதாக சொன்னதால் பவர் எழுதி வாங்கப்பட்டது. மேற்கண்ட விவரங்கள் எல்லாம் கிரைய உடன்படிக்கையிலோ, பொது அதிகார பத்திரத்திலோ, தாவா வழக்கிலேயோ, பிரமாண பத்திரத்திலோ சொல்லப்பட்டுள்ளதா என்றால் மேற்கண்ட விவரங்களை ரிஜிஸ்தரிடம் கொண்டுபோக முடியாது என்றும் பொதுவாக பார்மெட்டில் தான் போட வேண்டும் என்று சொன்னார்கள். கிரைய உடன்படிக்கை சமயத்தில் எனது தாயார் கோயம்புத்தூரில் குடியிருந்தார் என்றால் சரிதான். நான் சத்தியமங்கலத்தில் குடியிருந்தேன் என்றால் சரிதான். நான் சொல்வது

எல்லாம் பொய் என்றும், பிரதிவாதி கடனுக்காகத்தான் கிரைய உடன்படிக்கை எழுதிக்கொடுத்தார் என்றும், கடனுக்காகத்தான் எனது தாயாரிடம் பவர் எழுதி வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. கிரைய உடன்படிக்கை ரூ.2,25,000/-த்திற்கு மாதம் மாதம் 2,250/- வட்டி பிரதிவாதி எனக்கு செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. வழக்கு போடுவதற்கு முன்னால் பணத்தை வட்டியுடன் திருப்பி செலுத்திவிடுவதாக பிரதிவாதி என்னிடம் சொன்னார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் காலமானதால் வழக்கு போடவில்லை. வழக்கு போட்ட பின்னிட்டும் பிரதிவாதி வட்டி செலுத்தி வந்தார் என்றும், வழக்கு போட்ட பின்னிட்டு அசலையும் வட்டியையும் சேர்த்து கொடுத்துவிட்டு வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்று பிரதிவாதி என்னிடம் கேட்டார் என்றால் சரியல்ல. நான் கடனுக்காக கொடுத்ததினால் தான் கிரைய உடன்படிக்கையில் எல்லா விவரங்களையும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. கடனுக்கான ஆவணம் என்பதால் தான் இரண்டு ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், கடனுக்காக இல்லை என்றால் ஒரு ஆவணம் தான் தயார் செய்யப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரைய உடன்படிக்கை பாக்கி தொகையை நீதிமன்றத்தில் டெப்பாசிட் செய்யவில்லை என்றால் டெப்பாசிட் செய்துள்ளேன். நான் கிரையம் செய்யும் நோக்கில் வழக்கு தாக்கல் செய்திருந்தால் டெப்பாசிட் செய்திருப்பேன் என்றும், நான் அவ்வாறு செய்யவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக கடன் கொடுத்தால் கிரைய உடன்படிக்கை மற்றும் பொது அதிகார பத்திரம் ஏற்படுத்தப்படுவது வழக்கம் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் அப்பா அக்ரிமெண்ட் முடிந்து எவ்வளவு நாட்களில் இறந்தார் என்றால் ஆறுமாத காலத்தில் இறந்துவிட்டார். ஆனால் 2ம் பிரதிவாதியின் தந்தை இறந்து நோட்டீஸ் ஒரு வருடம் ஆறு மாதம் கழித்து தான் அனுப்பினேன் என்றால் சரிதான். ஆனால் அக்ரிமெண்ட் போட்டு ஒரு வருடம் பதினோரு மாதம் கழித்து தான் நோட்டீஸ் அனுப்பினேன் என்றால் சரிதான். அக்ரிமெண்ட் முடிந்து இரண்டு மாதம் கழித்து தான் தாவா வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தர்மராஜுன் தந்தை வெளியூர்

செல்லும் நபர் இல்லை என்றால் சரிதான். எனது அம்மாவிற்கும் தர்மராஜ் குடும்பத்திற்கும் பழக்கம் இருந்ததா என்றால் இல்லை. பொது அதிகார பத்திரம் எழுதும்போது தான் தர்மராஜ் குடும்பத்தை எனது அம்மா பார்த்தார் என்றால் சரிதான். முன் பின் அறிமுகம் இல்லாத நபருக்கு பிரதிவாதிகள் சொத்தை எழுதிக்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், கடனுக்காக எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. கிரைய பெறும் நோக்கத்திற்காக வாங்கியிருந்தால் சொத்தின் சர்வே எண், காலை எண் தெரியும் எனக்கு என்றும், கடனுக்காக எழுதப்பட்டது என்பதால் எனக்கு சொத்தின் சர்வே எண், காலை எண் தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவாவில் சொல்லப்பட்டுள்ள தாவா தொகையை வட்டியுடன் திருப்பி செலுத்த தயாராக உள்ளதால் கிரையம் செய்து கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் கடன் கொடுக்கவில்லை. மாற்றுப்பரிகாரம் எதுவும் கோரவில்லை என்பதால் தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.